திரு. கே. என். குமாரசாமி : சார், அந்த வழித்தடங்கள் பஸ் போக்குவரத்துக்கு உட்பட்டிருப்பதால், மழை காலங்களில் பள்ளங்களில் தண்ணீர் வந்தால், இரண்டு, மூன்று மணிநேரம் வரையில் போக்கு வரத்துக்கள் நிறுத்தப்படுகின்றன. ஆகவே, இந்தப் பாலங்களைக் கட்ட முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் சொல்லும் கஷ்டங்களை நானும் உணர்கிறேன். அதையெல்லாம் மறு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. கோமதி சங்கர திட்சிதர் : சபாநாயகர் அவர்களே, கழிந்த செப்டம்பர் மாதம் 3-ம் தேதி முதல் அமைச்சர் அவர்களால் அஸ்திவாரக் கல் போடப்பட்ட அம்பாசமுத்திரம் திட்டத்தை முடிப்பதில் தாமதம் ஏற்படுவதால், விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த வேலையை தொடர்ந்து செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி கோவை மாவட்டம் பற்றியது. திருநெல்வேலி வெகு தூரத்தில் இருப்பதால் அது பற்றிய விவரம் இல்லை.

பஞ்சாயத்து ஒன்றியப்புகளிலுள்ள நியமனக்குழுக்கள்.

*223 வினா. **திருமதி வி. ப. பழனியம்மாள் :**
திரு. பி. வெங்கடசாமி : } மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

பஞ்சாயத்து யூனியனில் உள்ள Appointment Committee-ல் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திருமதி வி. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, பெரும்பாலான தொகுதிகளில், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் இடையே உறவு முறை சரியாக இல்லை. ஆசிரியர்கள் நியமனத்தின்போது உள்ளூர் அரசியல் காரணமாக ஆசிரியர் பயிற்சி பெற்ற சிலர் பாதிக்கப் படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இனியாகிலும் சட்ட மன்ற உறுப்பினர்களையும் நியமிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1958-ம் ஆண்டு ஊராட்சி சட்டத் தின் 53-வது பிரிவின்படி இதிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் இடம் பெற வழி இல்லை. ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கும் சட்ட மன்ற உறுப் பினருக்கும் உறவு முறையை அவர்களே தான் சரிசெய்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு நாட்களுக்கு முன்பு தான் இந்தக் கேள்வி வந்து விரிவாகப் பதில் கொடுக்கப் பட்டிருக்கிறது.

Municipal Chairman, Kancheepuram

* 224. *Q.*—THIRU N. S. V. CHITHAN :
THIRU K. VINAYAKAM : } Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the attention of the Government has been drawn to the no-trust move against the Chairman of the **Kancheepuram** Municipality, in May 1968?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

1969 மார்ச் 7]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பதவியில் இருக்கிருரா அல்லது இல்லையா ? இல்லை என்ருல், என்ன காரணம் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தற்போது பதவியில் இல்லை. வேண்டாம் என்று துறந்து விட்டார்.

திரு. கே. விநாயகம் : அந்த நகர மன்றத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது தெரியுமா ? தீர்மானம் கொண்டு வந்து போதிய அங்கத்தினர்கள் கூட்டத்திற்கு வராததால், கையெழுத்துப் போட்டிருந்தும் வராததால், தீர்மானம் விவாதத்திற்கு வரவில்லையா ? இந்த இரண்டு தகவல்களும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்தக் கேள்வியின் கருத்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா என்பது. நமக்குக் கிடைத்திருக்கும் தகவல்படி, தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானம் நிறைவேற்றப் படும்போது, உறுப்பினர்கள் நகராட்சிக் கூட்டத்திற்குச் செல்லவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

தஞ்சாவூர் மாவட்ட கிராம சேவக்குகள்.

*225 வினு. **திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட முதல் நிலை கிராம சேவக்குகளுக்கு பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள் பதவி உயர்வுக்கான Panel list தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் 1966-ம் ஆண்டு மாநில கிராம நலத்துறை இயக்குநருக்கு அனுப்பியும் இது நாள் வரை அதை அனுமதிக்காமலும், பதவி உயர்வு கொடுக்காமலும், இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(இ) இந்த வினு எழவில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த மாதிரிப் பிரமோஷனில், "பிறர் பெயர் முன்னல் போயிருக்கிறது. என் பெயர் பின்னல் போய்விட்டது" என்கிற புகார்கள் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? புகார் இல்லாமல், இன்ன வரிசைக்கிரமத்தில் பிரமோஷன் கொடுக்க வேண்டும் என்கிற விதிமுறைகள் ஏதாவது வகுக்கப் பட்டிருக்கிறதா ? அது பின்பற்றப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபோன்ற பதவி உயர்வுகளுக்கு பரிந்துரைகள் கொடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப் படுகிருர். தகுதியை ஆராய்ந்து, பெயர்களை ஆய்வு செய்யும் பொறுப்பை கிராம வளர்ச்சி இயக்குநர் மேற்கொண்டிருக்கிருர். தேவையான சரியான குறிப்புகள் இல்லையென்ருே, வேலைத் திறமை குறைவாக இருப்பதாலோ, ஆய்வு செய்து இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பை கிராம வளர்ச்சி இயக்குநர் ஏற்றிருக்கிருர். இறுதியாகத் தயார் செய்யப்பட்ட அந்த பட்டியலிலிருந்து பதவி உயர்வுகள் கொடுக்கப் படுகின்றன.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, எத்தனை பேர்களை பரிந்துரை செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருக்கிருர் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருப்பது : 67 பேர்கள்.